# மோசேயின் மரணம் (உபா 30-34)

கர்த்தரின் பார்வையில் ஒரு ஆவிக்குரிய தலைவரின் தன்மைகளும்,குணாதிசியங்களும் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது. தலைவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் தோல்வியுறும் போது,அவர்களுக்கான தேவனுடைய நியாயத்தீர்ப்பு மற்ற விசுவாசிகளை விட மிகவும் கடுமையானதாக இருக்கும் என்று வேதம் சொல்லுகிறது.

'எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்' (லூக்கா 12:48) என இயேசு கற்பித்திருக்கிறார். இந்த பாடம் மோசேயின் சிறந்த பண்புகளையும் மற்றும் அச்சம் தருகின்ற தோல்வியையும் குறித்து விவாதிக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி,' நீ இந்த மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப் பார். நீ அதைப் பார்த்த பின்பு,உன் சகோதரனாகிய ஆரோன் சேர்க்கப்பட்டது போல,நீயும் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய். சபையார் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ண வேண்டிய நீங்கள் என் கட்டளையை மீறினீர்களே என்றார் (எண் 27:12-14)

மோசே கர்த்தரை நோக்கி,'கர்த்தருடைய சபை மேய்ப்பன் இல்லாத மந்தையைப் போல இராதபடிக்கு,மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள் மேல் அதிகாரியாக ஏற்படுத்த வேண்டும்' என்றான்.

கர்த்தர் மோசேயை நோக்கி,'ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்து கொண்டு,அவன் மேல் உன் கையை வைத்து,அவனை ஆசாரியனாகிய எலியேசருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி,அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்குக் கட்டளை கொடு.

இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்படியும் படிக்கு,உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்குக் கொடு. அவன் ஆசாரியனாகிய எலியேசாருக்கு முன்பாக நிற்கக்கடவன். அவனிமித்தம் அந்த ஆசாரியன் கர்த்தருடைய நாமத்தில்

சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்கக்கடவன் என்றார்.

'ஊரீம்' என்றால் 'ஒளி' என்று அர்த்தம் அது தலைமை ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கும் போது, இருதயத்தில் மேல் இருக்க வேண்டும்.

ஆரோனிற்கு அவன் முதலாம் உடைகளுடன் ஊரீம் கொடுக்கப்பட்டது. (யாத் 28:30)அது 'தும்மீம்' என்பவைகளோடு சேர்க்கப்பட்டு, கர்த்தரிடமிருந்து ஆலோசனை பெறுவதற்கு அவைகளை தலைமை ஆசாரியர்கள் பயன்படுத்துவார்கள்.

சில குறிப்பிட்ட கேள்விகளுக்கு கர்த்தரின் முடிவை குறிப்பதற்கு, இந்த இரண்டு விலையேற பெற்ற கற்களை பயன்படுத்துவார்கள்.

அதேப் போல் புதிய ஆசாரியனாகிய எலியேசரும் கர்த்தரிடமிருந்து வழி நடத்துதலின் செய்திகளை அவருடைய ஜனங்களுக்காக பெற்றுக் கொண்டான்.

கர்த்தர் சொன்னபடியே மோசே செய்து முடித்தான். மோசே தனது கைகளை யோசுவா மீது வைத்து,தேசத்தை வழி நடத்தும் படியாக அவனுக்குக் கட்டளை கொடுத்தான். அவனை ஆசாரியனாகிய எலியேசருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி,இவை யாவையும் செய்து முடித்தான். (எண் 27: 15-23)

பின்பு மோசே கர்த்தர் கட்டளையிட்டுச் சொன்ன எல்லாவற்றையும் ஜனங்களுக்கு மறுபடியும் சொன்னான்.

மேலும் அவன் என்னிடம் உங்களுக்காக ஒரு கட்டளை உண்டு. உங்கள் புத்திக்கு எட்டக்கூடாத அளவிற்கு இவைகள் மிகவும் கடினமானது அல்ல. எளிமையான கட்டளைகள்.

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூறுவாயாக. அவருடைய வழியிலே நடப்பாயாக அவருடைய நியாய பிரமாணத்தை கைக்கொள்ளுவாயாக என்பதே அந்த கட்டளைகள். அப்பொழுது நீங்கள் வாழ்ந்து பலுகிப் பெருகுவீர்கள்.

தேவனாகிய கர்த்தரும் உங்களை ஆசிர்வதிப்பார். உங்கள் இருதயம் மாறுபட்டு விலகிப் போனாலோ அல்லது கீழ்ப்படியாமல் போனால்,நீங்கள் நிச்சயமாக அழிந்து போவீர்கள்' என்று கூறினோன்.

வானத்தையும் பூமியையும் நான் சொல்வது உண்மை என்பதற்கு சாட்சியாக வைக்கிறேன். நான் ஜீவனையும்,மரணத்தையும்,ஆசிர்வாதத்தையும் சாபத்தையும் உங்களுக்கு முன் வைத்தேன்.

ஆகையால்,நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு,நீ ஜீவனைத் தெரிந்து கொண்டு,உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து,அவர் சத்தத்திற்குச் செவிக்கொடுத்து,அவரைப் பற்றிக் கொள்வாயாக. அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசமானவர்' என்றான் (உபா 30:11-20)

சிறிது நேரத்திற்கு பின் மோசே இஸ்ரவேலர் யாவரையும் நோக்கி,'இன்று நான் நூற்றிருபது வயதுள்ளவன். இனி நான் போக்கும் வரத்துமாயிருக்கக் கூடாது. 'இந்த யோர்தானை நீ கடந்து போவதில்லை' என்று கர்த்தர் என்னோடே சொல்லியிருக்கிறார். உன் தேவனாகிய கர்த்தர் தாமே உங்களுக்கு முன்பாகக் கடந்து போவார். அவரே உங்களுக்கு முன்னின்று,அந்த தேசத்தை அழிப்பார்.

நீங்கள் அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பீர்கள். கர்த்தர் சொன்னபடியே யோசுவா உங்களுக்கு முன்பாகக் கடந்து போவான். கர்த்தர் அவர்களை உங்களுக்கு ஒப்புக் கொடுப்பார். நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள். அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்' (உபா 31:1-3) என்றான்

பின்பு மோசே யோசுவாவை அழைத்து,அவனை நோக்கி,'பலங்கொண்டு திடமனதாயிரு. கர்த்தர் இவர்களுக்குக் கொடுப்பேன் என்று இவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்துக்கு நீ இந்த ஜனத்தை அழைத்துக் கொண்டு போய்,அதை இவர்கள் சுதந்தரிக்கும்படி செய்வாய்,

கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர்,அவர் உன்னோடே இருப்பார். அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை,உன்னைக் கைவிடுவதுமில்லை. நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.

மோசே இந்த நியாயபிரமாணத்தை எழுதி,அதைக் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியருக்கும்,மூப்பர்ருக்கும் ஒப்பிவித்து கட்டளையிட்டது. என்னவென்றால் ‘விடுதலையின் வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே கூடாரப்பண்டிகையில்,இந்த நியாயப்பிரமாணத்தை எல்லாரும் கேட்க அவர்களுக்கு முன்பாக வாசிக்கக்கடவாய்.

இதனாலயே பிள்ளைகளும் உன் வாசல்களிலிருக்கும் அந்நியர்களும் கேட்டு கற்றுக் கொண்டு தங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் செய்ய கவனமாயிருப்பார்கள்.என்றர்ன

இவைகளை சொன்ன பின்பு,மோசே மோவாபின் சமனான வெளிகளிலிருந்து எரிகோவுக்கு எதிரான நேபோ மலையிருக்கும் பிஸ்காவின் கொடுமுடிவில் ஏறினான். அது யோர்தான் நதியின் குறுக்கே இருந்தது. அங்கே கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ண தேசத்தைக் காண்பித்தார்.

அவனால் கிழக்கு முதல் மேற்கு மட்டும் மற்றும் வடக்கு முதல் தெற்கு மட்டும் எல்லா இடங்களையும் பார்க்க முடிந்தது. கர்த்தர் மோசேயிடம்,’நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப்பேன். என்று ஆபிராகமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இதுதான் உன் கண் காணும்படி செய்தேன். ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்து போவதில்லை’ என்றார்.

அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம் பண்ணினார். இந்நாள் வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான்.

மோசே மரிக்கிற போது நூற்றிருபது வயதாயிருந்தான். அவன் கண் இருளடையவுமில்லை. மோசேயின் மரணத்திற்கு பின்பு அவனுக்காக முப்பது நாள் ஜனங்கள் அழுது துக்கங்கொண்டாடினார்கள். மோசே,யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்.

இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்படிந்து,கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்க்ள.

‘கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப் போல,ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை. அவன் இஸ்ரவேலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாய்ச் செய்த சகல வல்லமையான கிரியைகளையும்,மகா பயங்கரமான செய்கைகளையும் இதுவரையிலும் எவரும் செய்ததில்லை’ (உபா 34:10-11).

பின்னர் கர்த்தர் மோசேயைப் போல இன்னொரு தீர்க்கதரிசி வருவார். அவருடைய வாயிலிருந்து கர்த்தருடைய வார்த்தை புறப்படும் என்று தம்முடைய ஜனங்களுக்கு உறுதி அளித்தார்.

இந்தப் பாடம் மிகவும் முக்கியம் ஏனென்றால் எல்லா ஆவிக்குரிய தலைவர்களும் மோசேயைப் போல குணாதிசியங்கள் கொண்டவர்களாக இருக்க வேண்டும். கர்த்தருடைய ஊழியத்தை பிறர் செய்யும்படியாக ஊக்குவித்து ஆலோசனைகள் பல கொடுத்து,காத்தருடைய உண்மையான ஆசிர்வாதங்களை பெற்றுக் கொள்ளும்படியாக அவர்களுடைய வழியை செவ்வைப்படுத்த வேண்டும்

இந்த பாடத்தை திரும்பி பார்க்க கீழ்கண்ட கேள்விகளுக்கு பதில் அளியுங்கள்.

1. மோசே,அவர் மரிப்பதற்கு முன்பு ஜனங்களிடம் கட்டளையிட்டு சொன்னது என்ன? (5 நொடிகள் தாமத்திற்குப் பிறகு)

   ‘உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து அவர் சொல்வதைச் செய் என்று கூறினான் என்று நீங்கள் சொல்லியிருந்தால் சரி.

2. இஸ்ரவேலின் மற்ற தீர்க்கதரிசிகளில் மோசே எந்த வகையில் வித்தியாசப்பட்டார்? (5 நொடிகள் தாமதத்திற்கு பிறகு)

   ‘மோசே கர்த்தரை முகமுகமாய் அறிந்திருந்தார்’ என்பது சரி.

3. இஸ்ரவேல் ஜனங்களோடு அந்த தேசத்திற்குச் செல்ல ஏன் மோசே அனுமதிக்கப்படவில்லை? (5 நொடிகள் தாமதத்திற்கு பிறகு)

    ஜனங்களுக்கு முன்பாக மோசே கர்த்தருக்கு கீழ்ப்படிய தவறிவிட்டான்’ அதனால் அவன் அனுமதிக்கப்படவில்லை என்பது சரி.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள்.

பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்தப் பாடத்தை யாரிடமாவது சொல்லி அவர்களிடம் இந்த பாடத்தில் விசுவாசமுள்ள தலைவர்களும் இன்றைய மக்களும் எடுத்துக் கொள்ளுகிற விஷயமாக எவை கருதப்படுகிறது? என்று கேளுங்கள். இந்த பாடத்தின் மூலம் பதில்களை அறிந்து அவற்றை கலந்தாலோசியுங்கள்.

இந்தப் பாடத்துடன் Bible 121 முற்றுப்பெறுகிறது.